நூல்

சமர்ப்பணம்

பதிப்பாசிரியர்

ஜி.பி.எஸ். பாலசுப்பிரமணியம்


வருடம்

1994


தென்னாடுடைய சிவனே போற்றி

ஓம் நமசிவாய

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி



ஆநிலையப்பர்



சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்

தஞ்சையில் கூடும் 8ஆவது உலகத் தமிழ் மாநாடு சிறக்க
கரூர் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிடும்

சிறப்பு மலர் - 1995

சமர்ப்பணம்

செந்தமிழே உயிரே நறுந்தேனே செயலினை மூச்சினை உனக்களித்தேனே எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்ற அடிப்படையில் நிகழும் 8 வது உலகத்தமிழ் மாநாட்டினை வாழ்த்தி வெளிவருவது இந்த அரும்பு. இதன் உள்மணம் கருவூர் சிவனடியார்த்திருக்கூட்டத் திருப்பணித் திட்டச் செயல்பாடுகளும் நெரூர் சதாசிவபிரம்மேந்திராள் ஜீவசமாதி பெற்ற வரலாறும் ஆகும்.

இந்த அரும்பு மலர் வண்ணம் காட்டும் இதழ்களாக சதாசிவானந்தா. தேஜோமயானந்தா ஆகிய அருட் செல்வர்களின் நினைவஞ்சலியும் கரூர் பொதுசமய சன்மார்க்க சங்கம், கரூர் திருக்குறள் பேரவை ஆற்றி வரும் தெய்வத் தமிழ்ப்பணியும் அமைகின்றன.

இம்மலரின் உருவாக்கத்தில் நிதிஉதவிப் பங்கு பணி ஏற்ற கரூர் வைசியா வங்கி, லட்சுமி விலாஸ் வங்கி தலைவர்கள், இயக்குநர்களும், செட்டிநாடு சிமிண்ட் ஆலைய நிர்வாகிகளும் பெருமைக்குரியவர்கள்.

இம்மலர் செம்மைபெற ஒத்துழைத்து உதவிய பேராசிரியர் கருவை பழனிச்சாமி உழைப்பையும், கரூர் ரேவதி அச்சகத்தாரின் திறமையையும் பல்லாற்றானும் துணை நின்ற சிவனடியார் திருக்கூட்டச் செயல்குழுவினரின் இறை உணர்வையும் போற்றி நன்றி செலுத்துவதில் மகிழ்கிறேன்.

கருவூர் சிவனடியார் திருக்கூட்டத் திருப்பணிகளை நல்லாற்றுப்படுத்தி அரண்செய்யும் பண்பாட்டின் காவலர் தமிழக அரசின் தொழில் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் மாண்புமிகு ம. சின்னச்சாமி அவர்களுக்கு இச்சிறுமலர் ஒரு காணிக்கையாகும்.

என்றும் இறைப்பணியில்

வி.பி.எஸ். பாலசுப்பிரமணியம்

பதிப்பாசிரியர்,
1, காசிம் தெரு,
கருவூர் 639 001.

கருவூர்
31. 12. 1994

தவத்திரு சதாசிவானந்தா சுவாமிகளுக்கு நினைவஞ்சலி

நெரூர் தவத்திரு சதாசிவானந்த சுவாமிகள் நெரூரில் கைலாச ஆசிரமத்தை நிறுவியதோடு அங்கே அதிஷ்டானம் கண்டு ஜீவ சமாதி அடைந்த அருள்மிகு சதாசிவ பிரம்மேந்திரர் வரலாற்றையும் வெளியிட்டு அவருடைய பெருமைக்குரியவர்.

நெரூர் சுவாமிகள் என்னும் திருநாமத்துடன் நெரூர் சதாசிவ பிரம்மேந்திரர் மகா சன்னதியில் தங்கியிருந்த குருதேவர் அருள் திரு சதாசிவானந்தா அவர்கள் தமது ஒன்பதாம் வயதில் தந்தையிடம் மந்திரதீட்சை பெற்றார். 23 ஆவது வயது வரை தினசரி 5000 முறை தவறாமல் மந்திரம் ஓதி கிராமக் கல்வியும் மதுரை தமிழ் சங்கக் கல்வியும் கற்றார். பிறகு தனது தந்தையின் குருவினிடம் சென்று சில சாஸ்திரங்களை கற்றுக்கொண்டார். பின்னர் கோவிலூர் ஆதீனத்தில் கற்ற அருள்திரு இராமசாமி சுவாமிகளிடம் ஞான வாசிட்டம் வரை அத்யாத்ம சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தார். பல திருத்தலங்களில் தங்கி தவமியற்றி 13.5.1942ல் நெரூர் சதாசிவ பிரம்மேந்திரர் அதிஷ்டானத்தை அடைந்து தங்கி 51 தினங்கள் மவுன விரதத்தோடு திரிகாண வழிபாடு செய்தார். அப்போது பிரம்மேந்திரர் அனுக்கிரஹம் மானசீகமாகக் கிடைக்கப்பெற்றார். பின்னர் ஆண்டு தோறும் 40 தினங்கள் நெரூரில் தங்கி தவமிருப்பது வழக்கமாக இருந்தது. பிறகு நெரூர் சதாசிவ பிரம்மேந்திரர் மகாசன்னிதியில் விதிபூர்வமாக சந்நியாச தீட்சை பெற்று சில தினங்கள் தங்கியிருந்தார். பிறகு வட இந்தியா சென்று இமயமலையில் உள்ள ரிஷி கேசம், பத்ரிநாத், கேதாரநாத், அமர்நாத், துங்கநாத் முதலிய சேத்திரங்களை தரிசித்து திருக் கைலாயம் சென்று கைலயங்கிரியை பிரதட்சணம் செய்து கைலாய பதியை தரிசித்துக் கொண்டு நேராக 18.8.1957இல் நெரூர் வந்து பிரம்மேந்திரர் சந்நிதியில் அடைக்கலம் புகுந்து குருநாதர் அனுக்கிரஹத்தால் அங்கேயே மதுஹரிபிக்ஷ செய்து கொண்டு தவமியற்றினார்கள்.

புதுக்கோட்டை தேவஸ்தானங்களைச் சேர்ந்த சதாசிவ பிரம்மேந்திரர் கோயில் மிகமிகப் பழுதுபட்டிருப்பதை அறிந்து மன வருத்தத்தோடு தவமியற்றுங்காலத்தில் பிரம்மேந்திர சுவாமிகளின் திருவருளே துணையாக திருப்பணிக்குழு நிறுவி பல திருப்பணிகளும் அழகாக செய்து திருமதிலும் எழுப்பி 1.7.1965இல் திருக்குட நன்னீராட்டு விழா (அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்) நடத்தினார்கள். அது முதல் வாக்கு மவுனத்தோடு திகரண வழிபாடு செய்து கொண்டு 3 மணிக்கு மேல் அவ்விடம் வரும் பக்தர்களுக்கு அத்யாத்ம சாஸ்திரக் கருத்துக்களைப் போதிப்பது வழக்கம்

1.6.77இல் சதாசிவானந்தா சுவாமிகளின் சீரிய முயற்சியால் திரு. T.M.நாராயணசாமி பிள்ளை அவர்களின் தலைமையில் சதாசிவ பிரம்மேந்திரர் சந்நிதி மகா கும்பாபிஷேகம் கண்டது.

1985இல் சதாசிவானந்தா சுவாமிகள் சமாதி ஆனார்கள். கைலாச ஆசிரம அன்பர்கள் மகா மேரு நிறுவி இன்றும் வழிபட்டு வருகிறார்கள்.

- பதிப்பாசிரியர் வி.பி.எஸ். பாலசுப்ரமணியம்.

குருமஹராஜ் சுவாமி தேஜோமயானந்தா சரஸ்வதி அவர்களுக்கு அஞ்சலி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்ற வள்ளுவப் பெருந்தகையின் இனிய வாக்கிற்கிணங்க நமது முன்னோர்கள் நமக்கு வகுத்துத் தந்துள்ள பிரம்மச்சரியம், இல்லறம், வானப்ப்ரஸ்தம் சந்யாசம் என்ற முறைப்படி வாழ்ந்த பெருமையுடையவர் சுவாமி தேஜோமயானந்தா சரஸ்வதி சுவாமிகள்.

பாரதம் தந்த அருட் செல்வர்களுள் தலைசிறந்தவரும் சிறந்த தேசபக்தரும் இந்து மதத்திற்கு தூண் போன்று விளங்கியவருமான சுவாமி தேஜோமயானந்தா சரஸ்வதி அவர்கள் திருச்சிராப்பள்ளியில் சண்முக முதலியார் பாவாயம்மாள் என்ற தம்பதியினருக்கு மகவாக பிறந்தார். இயற்பெயர் விஸ்வநாதன் என்பது தமது இளமைப் பருவத்தில் திருச்சிராப்பள்ளியில் கல்வி பயின்றார். கல்வி முடிந்ததும் அஞ்சல் நிலையத்தில் தபால் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். பணிபுரியும் காலத்தில் முன்வினைப் பயனாகப் பல ஆன்மீக குருமார்களுடன் தொடர்பு ஏற்பட்டு 1958இல் இமயமலை ரிஷிகேஷ் தெய்வீக வாழ்க்கைச் சங்க ஸ்தாபகரான ஸ்வாமி சிவானந்தஜீ மஹராஜ் அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று 1959இல் மேற்படி ஸ்வாமிகளுடன் மந்தர தீட்சையும் பெற்றுக்கொண்டார்கள்.

மேலும் பணியில் இருந்துகொண்டே இமயஜோதி ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தாஜீ மஹராஜ் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய புத்தகங்களில் சுமார் 11 புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்து நூல்கள் அனைத்து சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் மிக எளிய நடையில் அமைந்துள்ளன.

ஸ்வாமிகள் தமது 31 ஆவது வயதில் இல்லறத்தை துறந்து சுவாமி அத்யானந்த சரஸ்வதி அவர்களிடம் சந்யாசதீக்ஷை பெற்று சுவாமி தேஜோமயானந்தா சரஸ்வதி என்ற திருநாமம் பூண்டார்கள் 1967 முதல் 1973 வரை ரிஷிகேஷ் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும்,

வேதாந்த மற்றும் ராஜயோக ஆசிரியர் ஆகவும் சேவை செய்து வந்தார்கள். அதன் பிறகு மகாராஷ்டிரியம் கனேஸ்புரியிலுள்ள ஸ்ரீ குருதேவ் சித்த பீடத்தில் ஸ்வாமி முக்தானந்தா பரமஹம்சர் அவர்களோடு இணைந்து சிங்கப்பூர், ஆஸ்த்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, மேற்கு ஜெர்மணி, பிலிப்பைன்ஸ், மலேசியா போன்ற உலக நாடுகளுக்கு யாத்திரை சென்று யோக வகுப்புகள் பலவும் சொற்பொலிவுகள் பலவும் நடத்தினார்கள். இந்து மதத்தின் உயர்ந்த கருத்துக்களையும் தத்துவங்களையும் இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாட்டவரும் சுலபமாக புரிந்துகொள்ளும் வண்ணம் எடுத்துக்கூறி அனைவரின் புகழையும் பாராட்டுதல்களையும் பெற்றார்கள்.

1980இல் சேலம் ராஜராஜேஸ்வரி மகிலா ஸமாஜத்தின் ஸ்தாபகராகிய யதீஸ்வரி மத் மதாம்பா சரஸ்வதி அவர்களது அருளாணைப்படி மேலைநாட்டிலிருந்து இந்தியாவிற்கு திரும்பி வந்து சேலத்தில் தங்கி குருதேவ் குருகுலம் தர்ம டிரஸ்ட் என்ற ஸ்தாபனத்தை நிறுவினார்கள். சேலம் ராஜராஜேஸ்வரி மகிலா ஸமாஜத்தின் கௌரவ ஆலோசகராகவும் இருந்து மேலும் பல ஊர்களுக்கும் சென்று அந்தர் யோகங்களும் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வந்தார்கள். சிறு குழந்தை முதல் பெரியோர் வரை அனைவரும் எளிதில் உணரும்படி ஆன்மீகக் கருத்துக்களை மிக எளிமையாக எடுத்துக் கூறும் திறமை பெற்றவர். தமது உடல் நலத்தையும் கவனிக்காது ஆன்மீக தொண்டு புரிந்து வந்தார்கள். 1985ல் நெரூர் கைலாச ஆஸ்ரமத்தின் குரு முதல்வராகப் பொறுப்பேற்று நடத்தி வந்தார்கள்.

ஸ்வாமிகள் கரூர் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். கரூரில் நமது திருக்கோயிலில் பொது சமய சன்மார்க்க சங்கக்கூட்டத்தில் ஆன்மீக சொற்பொழிவு மூலம் இந்து சமயத்தின் உயர்வைப் பலரும் எளிதில் புரிந்து கொள்ளச் செய்தார்.

ஸ்வாமிகளின் அஞ்சாநெஞ்சும் தேசபக்தியும் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும் ஸ்வாமி விவேகானந்தரின் நினைவை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன. இவ்வாறு குன்றா மணி விளக்காக திகழ்ந்த சுவாமிகள் 10.5.93இல் மஹா சமாதி அடைந்து விட்டதன் காரணமாக அன்னாருக்கு நினைவு அஞ்சலி செலுத்தும் வகையில் இதைச் சமர்ப்பிக்கின்றோம்.

சுவாமி சதாசிவானந்தா டிரஸ்ட் உறுப்பினர்கள்
கைலாச ஆஸ்ரமம்
நெரூர்.

உ

ஓம் தத்சத் பரப்பிரம்மணே நம:

ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள் சரித்திரச் சுருக்கம்

ஈசனா ஞானி யிருந்துள விடத்தே யிருப்பது முத்திதா னந்தத்
தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னியி லிருப்பது மன்னி
மாசிலாப் பரம ஞானியா முனிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கில்
ஆசிலா அரியு மொப்பல னானு மொப்பல னேவரொப் பாரே.

தெய்வத் தமிழ் வளர்த்து சோமசுந்தரக் கடவுள் பல திருவிளையாடல்கள் புரிதற்கு ஏதுவாயுமிருந்த மதுரை மாநகரிலே (300) முந்நூறு வருடங்களுக்கு முன்பு ஆந்திரப் பிராமண குலத்தில் ஆசார சீலராக இருந்த சோமநாத அவதானி என்பவர் பல கலைகளையும் கற்று; உலகம் போற்றும் உத்தமராய் விவேக வைராக்யத்துடன்; பிரார்த்தனை மந்திரஜப விரதானுஷ்டானங்களைப்பற்றி வாழ்ந்துவரும் அக்காலத்தில் அவரது பெற்றோர்கள் ஒழுக்கம் நிறைந்த குலத்தில் பார்வதி என்னும் நாமம் பெற்ற கற்பரசியை சோமநாத அவதானிக்கு திருமணம் முடித்தனர். முறைப்படி கிருகஸ்தாசிரமம் நடத்தி வந்த அத் தம்பதிகட்கு நெடுநாட்கள் சந்ததி கிடைக்கப் பெறாமல் தீர்த்த யாத்திரை செய்து பல மக ரிஷிகள் ஆசியும் பெற்று, இறுதியாக இராமேஸ்வர யாத்திரையையும் முடித்து வந்த பின்னர் இராமநாதர் அனுக்கிரகத்தால் பார்வதி தேவி கருவுற்று, சுபதினத்தில் சுபமுகூர்தத்தில் சுவர்ண விக்ரகம் போன்ற குழந்தையைப் பெற்றனர். குழந்தையின் பொலிவும், புன்முறுவல் தோற்றமும் கண்டு, பெற்றோர் சிவராமகிருஷ்ணன் என நாமம் சூட்டி கடவுளிடம் பிக்ஷையாக தமக்கு கிடைக்கப்பெற்ற குழந்தையாகையால் பிக்ஷுகுப்தன் என்னும் செல்லப் பெயர் வைத்து வளர்த்து வந்தனர்.

சிவராமகிருஷ்ணன் உடல் பாலப்பருவத்தில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாயும், உயிர் உண்மையறிவானந்தம் பெற்று அருளோடும் வளர்ந்து வந்தது. குழந்தை ஆடுவதெல்லாம் ஆனந்த நிர்த்தனம். பாடுவதெல்லாம் பரம்பொருள் பற்றிய சங்கீர்த்தனமாக இருந்தது. இளமையிலேயே வேதாத்யயனம் முடித்து, உள்ளத் தெளிவு பெற்ற இவர் பல கலைகளையும் பழுதறவோதித் தேர்ச்சி பெற்றார். தாயாரின் வேண்டுகோளுக்கு மறுப்புக் கூறமுடியாத நிலையில் திருமணம் நிறைவுற்றது. சில வருடங்களுக்குப் பிறகு மணமகள் பருவம் பெற்று வீட்டிற்கு வந்தநாளில் விசேட விருந்து தாயாரால் நடத்தப்பட்டது. அந்த தினத்தில் சிவராமகிருஷ்ணன் பசிநேரத்திற்கு உணவு கிடைக்காமல் வாடினார். விசாரம் பெருகிற்று. பொய்யுலக வாழ்வின் மத்தியில் துன்பங்களை அனுபவித்தற்கேது இல்வாழ்க்கைத் துன்பங்களை துடைத்தற்கேது துறவு வாழ்க்கையென யூகித்து உறுதி பூண்டு அப்போதே வீட்டை விட்டு வெளியே புறப்பட்டுவிட்டார்.

இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலியென்றிவை யெல்லாம் - மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

" இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு " - (பொய்யாமொழி)

நான்கு சாதனங்களும் பெற்ற இவர் தெளிந்த மனதுடன் திருவிசைநல்லூர் ஐயர்வாள் (ஸ்ரீதரவேங்கடேசர்) என்பவரிடம் சில நூல்களைக் கற்றார். பின்னர் சுரோத்ர பிரம்ம நிஷ்டா பண்டிதராயிருந்த ஸ்ரீபரமசிவேந்திராளிடம் அடைக்கலம் புகுந்து தீக்ஷை பெற்று சதாசிவமெனப் பரமசிவேந்தரரால் தரப்பட்ட ஆசிரம நாமத்துடன் வேதாந்த சாஸ்திரங்களையும் நன்கு கற்றார். உள்ளத்தில் சந்தேகம் தோன்றும் போது குருநாதரிடம் கேட்டு தெளிவு பெற்று மகிழ்வார். தனது சகாக்களுடன் தர்க்கம் பேசி வெற்றிபெறுவார். இப்படியாக அத்யாத்ம சாஸ்திர ஆராய்ச்சியில் நிபுணத்வம் பெற்றார். யாவரையும் தர்க்கித்து எளிதில் வென்றிடுவார். இவர் தர்க்கித்துப் பிறரை வாதத்தில் வெல்வதிலேயே காலங்கழிக்கிறார் என்பதையறிந்த குருதேவராகிய ஸ்ரீபரமசிவேந்திராள் ஒரு தினம், ஊரார் வாயடக்க கற்றுக்கொண்ட நீ உன்வாயை அடக்க கற்றுக்கொள்ளாததென்னே ! என்று அருளோடு சினந்தார். அதுமுதல் சதாசிவம் மௌனவிரதம் கைக்கொண்டு குருநாதரிடம் விடைபெற்று வனங்களிலும், நதி தீரங்களிலும் தங்கி ஊனுரக்கமின்றிக் கடுந்தவமியற்றினார். பின்னர் கரூருக்கருகாமையில் உள்ள நெரூர்கிராம ஆரண்ய வனப்பும், காவிரி தெக்ஷிணமாகச் செல்லும் காட்சியும் நிர்ஜ்ஜனப் பிரதேசமும் மனதைக்கவர்ந்தது. இதுவே தவத்திற்குரிய இடம் எனத் தீர்மானித்தார். ஜாதி வருணாசிரம தருமங்கள் உடல் அபிமானம் உடையவர்க்கே என எண்ணி சகல பற்றுக்களையும், அபிமானங்களையும் அகற்றி எல்லா ஜீவராசிகளும் விரும்பும் நிலையில் மனதைப் பண்படுத்திக்கொண்டு தனது நிஜசொரூபமாக வீற்றிருக்க முயன்றார். தபோபலத்தால் அணிமாதி சித்திகளும் பஞ்சயோகங்களும் கைவரப்பெற்றது. ஜடபரதர் போல் வனத்தில் நிஷ்டையில் இருந்த சமயம் விறகு வெட்ட வந்த ஒருவன் ஒரு சுமை விறகை இவர் தலையில் வைத்து எழுந்து நடக்கச் சொன்னான் மகரிஷியும் நடந்து சென்று எல்லோரும் சுமைகளை கீழே வைக்க இவர் சுமையை அவைகளின் மேலே வைத்தனர். எல்லா விறகும் நெருப்பு பற்றி எரிந்து பஸ்பமாயின. கண்டோர் எல்லோரும் நடுக்குற்று பிரம்மேந்திராள் திருவடியில் அடைக்கலம் புகுந்தனர். மற்றொரு சமயம் ஒரு நெற்குவியலின் அருகில் காவலர்கள் இவரை அடிக்கத் தடிகளை ஓங்கிக் கொண்டு வந்தனர். அருகில் வந்தவுடன் கால்களும் நடக்கமுடியாமல் ஓங்கின கைகளையும் இறக்க முடியாமல் நின்றனர்.

காலையில் பண்ணையாட்கள் மரக்கட்டைகள் போல் அசையாமல் நிற்பதறிந்த ஜமீன்தார் பிரம்மேந்திரர் திருவடிகளில் சரண்புகுந்து மன்னிப்பு பெற்று நலன்பெறச் செய்தார். இன்னொரு சமயம் கொடுமுடிக்கருகாமை

யிலுள்ள காவிரி நதியின் மத்தியிலுள்ள அகத்தியம் பாறையின் மீது நிஷ்டையில் இருக்கும் போது நதி பெருகி உடலை மணலில் மறைத்துவிட சிலகாலத்திற்குப் பிறகு மணலை பறிக்கும்போது தூங்கியெழுந்தவர் போன்று எழுந்து நடந்த மஹாயோகி சதாசிவப்பிரம்மமாகும். ஆகவே அன்னார் உலகை மறந்தவர், திக்கு தேசாதிகள் இறந்தவர், திகம்பரர், மெய்ஞ்ஞான இலக்கணங்களும், அனுபவமும் நிறையப் பெற்றவர் ஆவார்.

உடலை மறந்து உலகெங்கும் சஞ்சரிக்கலானார். புதுக்கோட்டைக் காடுகளில் வைக்கோல் போருக்கடியில் சிலகாலம் கிடந்தார். வைக்கோல் அகற்றப்பட்டபோது எழுந்து நடந்தார். அதுகண்ட புதுக்கோட்டை மஹாராஜா விஜயரகுநாததொண்டமான் சரண்புகுந்து தீக்ஷை பெற்றார். தீக்ஷா மந்திரம் எழுதப் பெற்ற மணலை அங்கவஸ்திரத்திலேந்தி வந்து அரண்மனையில் ஒரு பொற்பேழை செய்து அதில் வைத்துக்கொண்டார். புதுக்கோட்டைக்கருகிலுள்ள திருவரங்குளம் காடுகளில் சதாசிவப்பிரம்மம் தங்கித்தவமியற்றும் அக்காலத்தில் 1752 ல் சிவஞானபுரம் துரையெனச் சிறப்புப்பெயருடன் வழங்கும் விஜயரகுநாத தொண்டமான் அடிக்கடி பிரம்மேந்திராள் தவமியற்றும் இடம் சென்று சேவைபுரிந்து தனக்குற்ற ஐயங்களை நீக்கிக் கொண்டு தானும் கடுந்தவம் இயற்றி வந்தார்.

மஹாராஜாவுக்கு உண்டாகும் சந்தேகங்களை மணலில் எழுதி நிவர்த்தி செய்வாராயினர். மஹாராஜாவும் பேராதரவோடு மணலில் எழுதப்பட்ட அக்ஷரங்களை உள்ளத்தில் அமைத்துக்கொண்டு மீண்டும் மணலை பொற்பேழையில் எடுத்து வைத்திடுவார். இப்படியாகச் சில வருடங்கள் பிரம்மேந்திராளைப்பற்றி பல விஷயங்களைக் கேட்டுத்தான் தெளிந்த நிலையில் தவமியற்றினார். பிரம்மேந்திராள் உத்திரவின்படி பிக்ஷாண்டார் கோயில் கோபாலகிருஷ்ண சாஸ்திரிகளை அரச சபைக்கு அழைத்து வந்து வேண்டிய சன்மானங்கள் தந்து அங்கேயே வைத்துக்கொண்டு சாஸ்திர பாடங்களும் கேட்டார். விஜயரகுநாத தொண்டமான், சதாசிவேந்திரரை சந்தித்து அடைக்கலம் புகுந்த நாள்முதல் புதுக்கோட்டை ராஜ்யத்தில் பல நன்மைகளும் பெருக ஆரம்பித்தன. அச்சமயத்தில் பிரஹதாம்பாள் கோயிலில் நெய் விளக்கேற்றி வைக்கும்படி உத்திரவு இட்டு பிரதிவாரமும் தீபத்திற்கு போதிய அளவு நெய்யை அரண்மனையிலிருந்தே அனுப்பும்படியும் கட்டளையிட்டார். இன்றும் அதுபடியே பிரஹதாம்பாள் கோயிலுக்கு அரண்மனையிலிருந்து நெய் அனுப்பப்படுகிறது. பிரம்மேந்தராள் திருக்கரங்களால் மன்னனுக்கு மந்திரங்கள் எழுதிக்காண்பித்த மணலை இன்றும் அரண்மனையில் அர்ச்சித்து ஆராதித்து வருகின்றனர். ஒரு சமயம் சதாசிவேந்திரர் பிரஹதாம்பாள் கோயிலில் அர்ச்சனை தொடங்கும்போது ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு புஷ்பமாக பிரஹதாம்பாள் திருவடியில் உதிர்ந்தது மற்றொருபோது சதாசிவேந்திரர் பிரஹதாம்பாளுக்கு கனகமணி மாலையணிவித்துள்ளார், மாலையின் நாயக மணியில் " பிரஹதாம்பாள் சரணசேகர சதாசிவம் "என்று எழுதப்பெற்றிருக்கிறது. கனகமணி மாலை பிரஹதாம்பாள் கோயில் ஆபரணங்களில் சிரோரத்தினமாகத் திகழ்கிறது.

புதுக்கோட்டை அரச குலகுருவாக இருந்த பிரம்மேந்திராள் புதுக்கோட்டை எல்லையைக் கடந்து செல்ல நினைத்த காலத்தில் மஹாராஜா தேவரீர், உடலை மறைக்க நினைக்கும் காலத்தில் சிறியேனுக்கு அறிவிக்க வேண்டுமென்று பிரார்தித்துக்கொண்டார். மஹாராஜா ஆழ்ந்த குருபக்தியுடையவராய் பிரம்மேந்திராள் உருவச் சிலை செய்து பிரஹதாம்பாள் கோயிலில் வைத்து இன்றும் பூஜை நடத்தி வருகின்றனர். சதாசிவப்பிரம்மேந்திராள் ஆசிபெற்ற அரசகுலம் இன்றும் பல அருள் நலன்களோடு மிளிர்ந்து கொண்டு இருக்கிறது.

சதாசிவேந்திரர் ஆத்மவித்யா விலாசம், யோகசுதாகரம், சித்தாந்த கல்பவல்லி, பிரம்ம சூத்திரவிருத்தி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். தஞ்சாவூர் புன்னைவனக்காடுகளில் தவமியாற்றுங்காலத்தில் தஞ்சாவூர் மஹாராஜா பிரார்த்தித்துக் கொண்டபடி புன்னைநல்லூரிலும் மாரியம்மன் விக்ரஹம் செய்து மந்திர சக்கரமும் எழுதித்தந்து ஆலயத்தில் வழிபாடு செய்கின்றவர்களுக்கு எல்லா நலன்களும் பெருகுமாறு ஆசீர்வதித்திருக்கின்றார் இன்றும் புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலில் ஆதரவோடு வழிபாடு செய்கின்றவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருகிக்கொண்டு இருக்கின்றதென்பது பிரசித்தம். கரூருக்கு அருகாமையிலுள்ள தாந்தோனி மலையிலுள்ள மகாஜனங்கள் திருப்பதி வெங்கேடசப் பெருமானைச் சென்று சேவித்து வருவது மிகச் சிரமமாக இருக்கிறது, தேவரீர் எங்களுக்கு வெங்கேடசப் பெருமாளை தரிசித்தால் உண்டாகும் பலனை தாந்தோனி மலையில் உ்ள்ள பெருமாள் தரிசனத்திலேயே கிடைக்குமாறு அனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். மகாஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி சதாசிவ பிரம்மேந்திராள் ஜனா கருஷண சக்கரம் ஒன்றை எழுதிவைத்து விஷ்ணு சகஸ்ரநாமத்தால் பெருமாளை அர்ச்சித்து ஆராதித்து வேண்டுவார் வேண்டும் வரங்களை ஈய்யுமாறு அனுக்கிரகித்தனர். அதுமுதல் தாந்தோனி அப்பர் வழிபாட்டால் மக்கள் எல்லா நலன்களும் பெற்று மகிழ்கின்றனர்.

இப்படியாக பிரம்மேந்திராள் செய்த சித்திகள் சொற்களிலும், ஏட் டினிலும் அடங்காது. ஒரு சிறிது கூறினோம். சித்திகளில் பற்றுடையவரல்லர் சதாசிவேந்திரர். எப்பொழுதும் பர தத்துவத்தில் திளைத்த மனமுடையவர். இயல்பாக நிகழும் சித்திகளில் கருத்துடையவரல்லர். உடலை மறந்து உலகெங்கும் சஞ்சரித்துள்ளார். சச்சிதானந்த சொரூபம் தானெனவும் உடல் மித்தையெனவும் திட அனுபவமுறையை அவர், ஒரு சமயம் சஞ்சாரசமாதியில் இருக்கும்போது ஒரு அரசனுடைய அரண்மனைக்குள் நடந்து கொண்டிருந்தார். கதவுகள் தடையின்றித் திறந்திருக்கக் கொலு வீற்றிருக்கும் அரசன் முன்னிலையில் திகம்பரராய் நடந்து அந்தப்புரம் போகும் வழியில் சென்று கொண்டிருந்தார். திக்குதேசாதிகள் இறந்த நிலையில் நடந்து செல்லும் இவரை அரசன் அறியாமையினால் யாரோ ஒரு பித்தன் ஆடை ஆபரணமின்றி அந்தப்புரம் செல்கிறானென்ற கோபத்தால் சதாசிவேந்திரர் கைகளை வாளால் தடிந்து விட்டான். உடலுணர்வின்றிய பிரம்மேந்திரர் வெட்டுண்டதை

உணராதவராய் யாதோ ஒன்று தடைபட்டது போல உணர்ந்து வந்த வழியே திரும்பி நடந்தார். கைககளிலிருந்து ரத்தம் அருவி போன்று பெருகிற்று. நிசப்தமாக யாதொரு குறிப்புமின்றிச் செல்லும் இவரைக் கண்ட அரசன் யூகித்து திகிலடைந்து, கலக்கமுற்று பைத்தியக்காரன் நானேயாம் இவரோ மஹாபுருசர் நான் பெருந்தீங்கிழைத்துவிட்டேன். இவரிடம் மன்னிப்புக் கிடைத்தாலன்றி உயிர்தரித்திருப்பதில்லை என்ற எண்ணங்கொண்டு கீழே விழுந்து கிடந்த கையை எடுத்துக் கொண்டு விரைந்தான். சதாசிவப்பிரம்மத்தின் திருவடிகளைப் இருகப்பற்றிக் கொண்டு மன்னிப்புக்கோரி அலறி அழுதான். குற்றமுணர்ந்த இவன் கோரிக்கைக்கு இரங்கி உணர்வு வடிவான பிரமேந்திரரது உள்ளம் சிறிது பகிர்முக உணர்ச்சி பெற்றது. நிகழ்ந்ததை அரசன் உரைக்க மன்னித்து கரத்தை இருந்த இடத்தில் பொருத்திக் கொண்டார். இரத்தம் சொட்டுதலின்றி மாசுமறுவின்றிக் கரங்கள் விளங்கின. ஒன்றுமறியாதவர்போல் மறைந்து சென்று விட்டார்.

சதாசிவப்பிரம்மம் வாரணாசி, மானாமதுரை முதலிய இடங்களிலும் தவமியற்றியிருக்கிறார் என்றும் தெரிகிறது. அபூர்வ சித்திகளும் ஆழ்ந்த ஆத்மானுபவமும் பெற்ற யோகி சதாசிவப்பிரம்மம், யோகிகளுக்கு யோகியாய், ஞானிகளுக்கு ஞானியாய், சக்கரவர்த்திகளுள் சக்கவரத்தியாய், திகம்பரர்களுள் திகம்பரராய்ப் பல லீலைகளும் இயற்றிய பிரம்மம், முடிவில் நெரூரில் உடலை மறைத்துவிட எண்ணி, முன்பு தான் தவம் இயற்றி எல்லா நலனும் எய்திய இடத்தில் உட்கார்ந்துகொண்டு யோகவலியால் மஹாராஜாக்களுக்கு உணர்த்தினார். புதுக்கோட்டை மன்னன், தஞ்சாவூர், மைசூர் மஹாராஜாக்களும் நெரூருக்கு விரைந்து வந்து குருநாதர் திருவடிகளைத் தரிசித்து உத்திரவை எதிர்பார்த்து நின்றனர். அவ்வமயம் தமது பிரதம சீடரான புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானிடம் குகை அமைக்கச் செய்து குறிப்பிட்ட நாளில் அதில் உட்கார்ந்து கொள்வேன். விதிப்படி சாமக்கிரிகைகளை மேலே நிரப்பி மண்ணால் மூடிவிட வேண்டும் என்று தெரிவித்தார்கள். விஜயரகுநாதத் தொண்டமான் உயிரோடு குருநாதர் உடலை மண்ணால் மூடுவதற்கு அஞ்சி , தேவரீர் இப்படியே எங்களுக்கு தரிசனம் தந்துகொண்டு இருந்தால் மகிழ்வோடு இருப்போம் என்று பிரார்த்தித்தார். அதற்கு சதாசிவபிரம்மம் இவ்வுடலை குகையில் வைத்து மண்ணால் மூடுவதால் நான் மரணமடைந்து விடமாட்டேன். எப்பொழுதும் ஒரு படித்தாகவே இருப்பேன். முன்னம் காவிரி மணலில் இவ்வுடல் புதைந்து கிடந்தது நீ அறியாயோ ? இதுபோன்ற வசனங்களால் மன்னனைத் தேற்றிக் குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் குகையில் உட்கார்ந்து கொள்வேன் விபூதி, உப்பு, மஞ்சள் தூள், சூடம் முதலியன கொண்டு மேலே நிரப்பி உடலை மறைத்து மேடை செய்துவிட வேண்டும். அதில் ஒன்பதாவது நாள் வில்வவிருஷம் தோன்றும். அதை அப்படியே விட்டுவிடவும். பன்னிரண்டாவது நாள் காசியிலிருந்து ஒரு பிரம்மச்சாரி சிவலிங்கம் கொண்டு வருவான். விருஷத்திற்கு பன்னிரண்டு அடி கீழ்புறம் சிவலிங்கத்தை ஸ்தாபனம் செய்து, கோயில் அமைத்து விதிப்படி பூஜைகளை நடத்தலாம். வில்வவிருக்ஷத்தின் நாற்புறமும் திறந்த வெளியாகவே இருக்கட்டும் என்று

கூறினார். இது துவாதசாந்தப் பெருவெளியில் வீற்றிருக்கும் குறிப்பு.

எங்கும் எல்லாப்பொருள்களிலும் சச்சிதானந்த சொருபமாய் நிறைந்து நிற்பது சதாசிவப்பிரம்மம். இவ்வித அதிஷ்டானம் உலகில் அதிசயம். பிரம்மநிஷ்டா பண்டிதர்களில் தலைசிறந்தவர் சதாசிவப்பிரம்மம். சதாசிவப்பிரம்மத்தின் நாமம் புகழ்வார்க்கும் விரும்பிய நலன்கள் கிடைக்கப்பெறும் என்பது சாஸ்திர சம்மதம்.

"பலன்கள் வேண்டிலப் பரிசெலாம் பலித்திடும் பரமதத் துவஞானி
நலன்கொள் நாமம் மந்திரம் ஜெயித்திட நயந்தவன் நீராடும்
சலம்கொள் தீர்த்தமாம் அவன் திரு மேனியே சகல தெய்வமும் செவ்வாய்
மலர்ந்த வாசகம் மறுபிறப் பெனவரும் மயற்பிணி மருந்தாகும்."

குருநாதர் உத்தரவுப்படியே யாவும் நிறைவுபெற்றது. சமாதிக் குகையில் உட்காரும் சமயம் காசியிலும், மானா மதுரையிலும் உள்ள தனது பக்தமகாஜனங்கட்கு தரிசனம் தந்திருக்கின்றார். கராச்சியிலும், மானாமதுரையில் உள்ள பக்தர்களும் நெரூரில் நடந்தது போலவே சதாசிவப்பிரம்மம் குகையில் உட்கார்ந்தவுடன் விபூதி, உப்பு, மஞ்சள்தூள், சூடம் முதலியன கொண்டு மூடி ஆராதித்தனர். ஒரே சமயத்தில் மூன்று உடல்களை மூன்று இடங்களில் உகுத்திருக்கிறார் என்பது குறிப்படத்தக்கது. பிரதானம் நெரூராகும். சதாசிவப்பிரம்மம் நெரூரில் ஜீவசமாதி பெற்று சுமார் 250 வருடமாகிறது என்று தெரிகிறது. இன்றைக்கு (70) வருடங்களுக்கு முன்பு சிருங்கேரி ஸ்ரீசாராதா பீடத்தில் ஜகத் குருவாக இருந்த சச்சிதானந்த சிவாபினவ நரசிம்மபாரதி மகாசுவாமிகள் தனக்குற்ற ஐயத்தை நீக்கிக்கொள்ள நெருருக்கு யாத்திரையாக புறப்பட்டார். வழியில் மகாதானபுரத்தில் சிலதினம் தங்கி நெரூர் வரும் வழியில் அரங்கநாதம் பேட்டை என்னும் கிராமத்துக்கு வடக்கு நோக்கி வரும்போது பல்லக்கு சுமந்துவரும் போகிகள் நடக்க முடியாமல் பின்னுக்கு நகர்ந்தனர்.

ஆசார்ய சுவாமிகள் நெருருக்கு விரைந்து நடவுங்கள் என்று கூறினார். போகிகள் முன்புறமிருந்து யாரோ ஒருவர் பின்னுக்கு உந்தித் தள்ளுவது போன்று இருப்பதால் எங்களால் நடக்கமுடியவில்லை என்று கூறினர். ஆசார்ய சுவாமிகள் உடனே பல்லக்கு விட்டிறங்கி திக்குநோக்கித் தெண்டனிட்டுச் சிரமேல் கரங்குவித்துக்கொண்டு இரண்டுமைல் தூரம் நடந்து பிரம்மேந்திராள் அதிஷ்டானத்தை அடைந்து சந்தேக நிவிர்த்தி கிடைக்குமென்ற நிச்சயத்துடன் மூன்று நாட்கள் இரவும் பகலும் அதிஷ்டானத்தின் முன்னிலையில் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். இந்த மஹாபுருஷர் ஆதரவோடு பிரம்மேந்திராள் அனுக்கிரஹத்தை பெற்றார். மூன்றாவது நாள் இரவு இவர் வினாக்களுக்கு யோகவலியால் விடை பகர்ந்தார் சதாசிவப்பிரம்மம். உடனே சரண்புகுந்து திரிகரண வழிபாடியற்றி சச்சிதானந்த சிவாபினவ நரசிம்மபாரதி சுவாமிகள் சதாசிவப்பிரம்மேந்திரரை நாற்பத்தைந்து சுலோகங்களால் துதித்தனர். அன்றுமுதல் பிரம்மேந்திராள் திருவுருவப்படத்தை தம் பல்லக்கின் முன்புறம் வைத்துக்கொண்டு சதா தியானித்துப் பிரம்மேந்திராள் பெற்றநிலையைத் தானும் பெறவேண்டும் என்ற

முயற்சியை பெருக்கி சொருபத்தில் இரண்டறக் கலந்தார் எனத் தெரிகிறது. அன்றும் இன்றும் சதாசிவப்பிரம்மத்தின் திருவுருவத்தில் அவருடைய கீர்த்தனங்களில் அவர் செய்த சாஸ்திரங்களில் ஆதரவுபற்றி தியானித்துத் துதிப்பவர்கட்கு எல்லா நலன்களும் கைகூடும் என்பது சர்வநிச்சயம்

தந்தையாய் ஆவானும் சார்ஹுதியிங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும் - எந்தமுயிர்
தானாகுவானும் சரணாகுவானு அருட்
கோனாகுவானுங் குரு.

கரூர் அருள்மிகு கல்யாண பசுபதீஸ்வரர் திருக்கோவில் சிவனடியார் திருக்கூட்டம் : ஒரு விளக்கம்

சொல்லினால் அளவிட்டுரைக்கவொண்ணாத பெருமையுடன் திகழ்பவர் சிவனடியார்கள். அய்ம்பெரும் பூதங்களும் தத்தம் நிலையில் பிறழ்ந்தாலும் தாம் சிறிதும் மனம் கலங்காது மாதொருபாகராகிய இறைவரது செந்தாமரை மலர் போலும் திருவடிகளை மறவாத இயல்புடையவர்கள். இறைவனாம் சிவபெருமான் பொருள் சேர் புகழ்திறத்தினையே காதலாகிக் கசிந்து ஓதும் உறுதியுடைவராய் நன்னெறியில் நிலை பெற நிற்பவர்கள். குற்றமில்லாத குணங்களின் குன்றெனத் திகழ்பவர்கள்.

ஒருகால் கெட்டொழிதலும் ஒருகால் உளதாதலும் இல்லாத திருவாகிய நிறையுடைய பெருஞ் செல்வத்தை நிலையாகப் பெற்றவர்கள். மட் பாண்டத்தின் சிதைவாகிய இழிந்த ஓட்டினையும் உலக மக்களால் மதிக்கப் பெறும் செம்பொன்னையும் ஒரு தன்மையாகவே நோக்கும் உள்ளமுடையவர்கள். இறைவனுடன் ஒன்றுதற்குக் காரணமாகிய அன்பின் திறத்தாலே அம்முதல்வனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவும் கருதிக் கைகளால் தொழுது போற்றும் தொண்டின் திறத்தையே என்றும் விரும்பி வேண்டுவதன்றி அம்முதல்வனோடு பிரிவற ஒன்றிப்பெறும் வீடு பேற்றின்பத்தையும், வேண்டாத வீறுபெற்று விளங்குபவர்கள்.

இத்தகு பெருமைக்குரிய சிவனடியார் திருக்கூட்டம் இன்றையக்காலக் கட்டத்தில் தமிழகத்தின் ஊர்தோறும் உள்ள சிவாலயங்களில் உருவாதல் வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுக்கு வழிகாட்டுவதாக கரூர் ஆனிலையப்பர் திருக்கோவில் 1993 ஆனித்திங்களில் சிறப்பாக நிறைவெய்திய திருக்குட நன்னீராட்டு விழாவைத் தொடர்ந்து 18.7.93 ல் நிறுவப்பட்டதொரு தொண்டு நிறுவனமாகும். தன்னார்வம் கொண்ட சிவநெறி போற்றும் திருவருட் செல்வர்களால் பின்வரும் செயல்திட்ட நோக்கங்களை அடைவதற்கு தோற்றுவிக்கப்பட்டது இச்சமூக அமைப்பு.

1. திருப்பணி செய்யப்பட்டுள்ள கருர் ஆநிலயப்பர் திருக்கோவிலின் உள்ளும் புறமும் தூய்மை நிலவ உழவாரப்பணி மேற்கொள்ளுதல்.

2. ஞாயிற்றுக்கிழமை பின் மாலைப்பொழுதில் தேவார திருவாசகமுற்றோதல் மற்றும் கூட்டு வழிபாடு.

3. ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள 63 நாயான்மார்களின் குருபூசையைத் தவறாது அனுசரித்தல்.

4. தமிழகமெங்கெனும் உள்ள பாடல் பெற்ற தலங்களுக்கு தலயாத்திரை சென்று வருதல்.

5. தலயாத்திரையாக கருருக்கு வரக்கூடிய வெளியூர் சிவனடியார்களுக்கு மகேசுர பூசை நிகழ்த்துதல்.

6. பிரதோச காவங்களில் மக்கள்நெரிசல் காரணமாக அமைதிக்கு ஊறுநேராமல் கட்டுப்பாடு போற்றுதல்.

7. ஒவ்வொரு மாதத்திலும் எந்த ஞாயிறுகளில் உழவாரப்பணி, எந்தநாள் பிரதோஷ வழிபாடு, எந்த நாள் கிருத்திகை, எந்த நாள் முற்றோதல், எந்த எந்த நாளில் நாயான்மார் குருபூசை நிகழும் என்ற தகவல் தொகுப்பினை சிவனடியார் திருக்கூட்ட உறுப்பினர்களின் இல்ல முகவரிக்கு அஞ்சல் அட்டையில் குறித்து அனுப்புதல்.

8. குருபூசை நாளின் போது உரிய நாயன்மார் வரலாற்றுச் சுருக்கத்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தைச் சார்ந்த அடியவர் ஒருவரைக்கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தச் செய்து வழிபடுவது.

9. சிவனடியார் திருக்கூட்டத்தின் ஆண்டுவிழா ஏற்பாடு செய்து உழவாரப்பணி, பிற திருப்பணி மூலம் திருக்கோவிலுக்குப் பெருமை சேர்த்த அடியவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புச் செய்தல்.

10. உழவாரப் பணியில் ஈடுபடும் தன்னார்வம் மிக்க சிவனடியார் திருக்கூட்ட உறுப்பினர்களுக்கும் மாணவ மாணவியருக்கும் பணி இடைவேளையில் உணவளித்துப் போற்றுதல் ஆகிய மகேசுரபூசை நிகழும்.

11. திருக்கோவிலில் திருமுறைப் புத்தக விற்பனை.


சிறப்புக்குரிய செயல் திட்டங்கள் : உழவாரப்பணி

உழவாரப்பணி மூலம் திருக்கோவிலின் உள்ளும் புறமும் தூய்மை பேணுதல் சிவனடியார் திருக்கூட்டத்தின் தலையாய நோக்கமாகும். ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே என்பது சிவஞானபோதம். மாலற நேயம்

மலிந்தவர் வேடமும் அரன் எனத்தொழுவதும் சிவஞான போதநெறி. அதற்கு வாய்ப்பாக அமையும் சமூக மையமே திருக்கோவில்கள். அவை மக்கள் சுற்றி வந்து இறை வழிபாடு செய்ய வசதி குறையாமல் இருக்க வேண்டும். புல் முளைத்து, புழுப்பூச்சிகள் வாசம் செய்யும் புதர்க்காடாக மண்டி விடுமானால் அடியவர்களும், பக்தர்களும் பிரகாரப் பாதைகளில் கால்வைத்து நடமாடமுடியாமல் போகும் அது வழிபாட்டிற்குத் தடையானதாகும். கல்லும் முள்ளும் காலில் பட்டு வருந்தும் போது வழிபாட்டிற்கு இடையூறு நேர்ந்து விடக்கூடும். தொடர்ந்து மேற்கொள்ளப்படும் உழவாரப்பணியை சிவனடியார் திருக்கூட்டம் ஊதியம் பெறும் பணியாளர் போல அரைகுறையாகச் செய்துவிடாமல் கண்ணும் கருத்துமாக சிரமதானம் செய்து பக்தி வழிபாடு சிறக்க துணையாக முடிகிறது. கோவிலின் வலம் வரும் பகுதியும் அபிஷேக ஆராதனை நிகழும் உட்பகுதியும் கழிவுநீராலும் பழைய பூச்சரங்களாலும் எண்ணெய் பிசுக்களாலும் அழுக்கடையாமலும் தீயவாடை படியாமலும் அவ்வப்போது கழுவித் தூய்மையைக் கட்டிக்காப்பது உழவாரப்பணி ஆகும். சிவனடியார் திருக்கூட்டத்தின் உறுப்பினர்களோடு விவேகானந்தா பள்ளி. சாரதா மகளிர் கல்லூரி, மாணவ மாணவியர் அணியும் உழவாரப்பணி சிறந்து விளங்க உதவுவதுண்டு. அதன் காரணமாக பக்தர் வருகை தடையின்றிப் பெருகவும் கோவில் வருமானம் கூடவும் வாய்ப்புள்ளது. இறைவழிபாடு கோவில் வழிபாடாக்கி அவ்வழிபாடு தலயாத்திரையாக மலர்ந்து இறையருள் பெற ஏதுவாகிறது. இத்தகு சிறப்புடைய உழவாரப்பணி திருநாவுக்கரசராம் சமயக்குரவரின் சுவடுகளையே மூலாதாரமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. உழவாரப்பணியைச் சிவனடியார் திருக்கூட்டம் மேற்கொண்டு முறையாக ஒவ்வொரு ஞாயிறன்றும் துப்புரவுப்பணியில் ஈடுபடவில்லையென்றால் கோவில் குப்பைக் களஞ்சியமாகி பக்தர்களின் வருகைக்கான சௌகரியமில்லாததாய் கோவில் பொலிவு குன்றி நாளடைவில் மக்கள் நடமாட்டம் குறைந்து போகக்கூடும். அதன் காரணமாக பூசை, உற்சவம், எல்லாம் மாறி திருமறைக்காடு கோவில் கதவு அடைக்கப்பட்டுக் கிடந்தது போல் அருட் பண்பாடு சிதைந்து போகலாம் . இங்ஙனம் புறச் சமயத்தார் எழுச்சி பெற்ற காலத்தில் சீரற்றுப் போயிருந்த திருக்கோவில்களுக்கு தலயாத்திரை செய்த திருநாவுக்கரசு அடியவரோடு ஒவ்வொரு கோவிலிலும் உழவாரப் பணியைச் செய்ததன் மூலம் இறையருள் பெறவும் கோவில் வழிபாடு சிறக்கவும் என் கடன் பணி செய்து கிடப்பதே என முழங்கினார்.

குருபூசை

கரூர் ஆநிலயப்பர் திருக்கோவில் மூலஸ்தானத்தின் தென்புறம் 63 நாயன்மார்களின் சந்நிதியில் திருமேனிகள் நிறுவப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு நாயன்மாரின் உருவச்சிலையின் கீழே அவர்கள் முத்திப்பேறடைந்த மாதமும் நட்சத்திரமும் பொறிக்கப்பட்டுள்ளன. அந்தந்த நட்சத்திரத்தன்று அந்தந்த நாயன்மார் குருபூசை நிகழும் தகவல் சிவனடியார் திருக்கூட்ட உறுப்பினர்களுக்கு முன்னதாகவே அஞ்சல் அட்டையின் வாயிலாக தெரிவிக்கப்படும். அதோடு கோவில் அறிவிப்புப் பலகையிலும் எழுதி வைக்கப்படும். குருபூசை முறையாக அபிஷேக ஆராதனை, சிவபுராணம்



ஓதிநிகழும்; முன்னதாக திருத்தொண்டத்தொகை, சிவபுராணம் ஓதப்பட்டு பின்னதாக நாயன்மாரின் வரலாறு சொல்லப்பட்டு பிரசாதம் வழங்கப்படும். அடியார் சரிதம் அனுதினம் ஓதுவோம். செடியாய வல்வினை சேராது ஓங்குவோம். என்றும் இன்பம் பெருகும் இயல்பினால் ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட மன்றுள்ளார் அடியார் அவர் வான்புகழ் நின்றதெங்கும் நிலவியுலகெலாம். இறைவனருள் வாய்க்கப் பெற்றத் திருத்தொண்டர்களே எல்லா உலகங்களையும் இடர் நீக்கி ஆளுதற்குரிய தகுதி வாய்ந்தவர்கள்.

அகில காரணர் தாள் பணிவார்கள் தாம்
அகில லோகமும் ஆளதற்குரியர்
நீலமாமிடற் றாலவாயிலான்
பாலதாயினார் ஞாலமாள் வாரே.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

என்று சேக்கிழார் அடியார் பெருமையைப் போற்றி மகிழ்ந்தார்

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால் வரையுந்
தானந் துளங்கித் தலை தடுமாறிலென் தண் கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்
டுனே மொன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமார்க்கே.

என்று திருநாவுக்கரசு சிவனடியார் நிலையைத் தெரிவித்தார்.

பூதம் அய்ந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொற் பாகர் மலர் த்தாள் மறப்பில்லார்

என்று சிவனடியார் குறிக்கோள் வெளிப்பட்டுள்ளதைப் பின்பற்றுவதற்கு வழி வகுப்பதுதான் நாயன்மார் குருபூசை வழிபாட்டில் காணக் கிடைப்பது. ஆநிலையப்பர் திருக்கோவில் ஓதுவார் திருமுறை வாணர் அ. செகந்நாதன் தேவார திருவாசக முற்றோதலிலும் கூட்டுவழிபாட்டிலும் உறுதுணையாயிருந்து பணியேற்பார்

தலயாத்திரை

கரூவூர்,
வெஞ்சமாங்கூடலூர்
கொடுமுடி
திருச்செங்கோடு

பவானிகூடல்
திருமுருகன்பூண்டி
அவினாசி

ஆகிய தேவாரப்பாடல் பெற்ற கொங்கேழ் தலங்களுக்கு 21.8.94 அன்று கரூர் சிவனடியார் திருக்கூட்டம் தலயாத்திரை மேற்கொண்டது. அத்தலயாத்திரையில் கரூர் பசுபதிபாளையம் விவேகானந்தா கல்வி நிறுவனத்தலைவர் தவத்திரு. ஆத்மானந்த சுவாமிகள் கலந்துகொண்டு தலைமையேற்று நெறிப்படுத்தினார்கள்.

திருக்கூட்டத்தலைவர் சிவத்திரு. வி.பி.எஸ். பாலசுப்பிரமணியம் துணைத்தலைவர் தவத்திரு ஆர். நடராஜன் அறங்காவலர் குழுத்தலைவர் சிவத்திரு. பி. செல்லமுத்து ஆகிய அருட்செல்வர்கள் யாத்திரையில் கலந்து கொண்ட திருக்கூட்டத்தினர்களுக்கு கலந்துகொண்ட சாராதா மகளிர் கல்லூரி ஆசிரியைகளும் மாணவியர்களும் உணவுக்கான ஏற்பாடுகளைச் செய்து உதவியதோடு அந்தந்த திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள பரம்பொருளை பூசித்து தரிசனம் செய்து வழிபட்டுத் திருவருள் பெறவும் அருளியிருந்தனர். தலப் பெருமைகள் குறித்து உரையாடி மகிழவும் நாயன்மார் குறித்து உரையாற்றி மகிழவும் தேவாரத் திருவாசகப் பாடல்களை முழங்கவும் தலயாத்திரை பேரின்பப் பேரறிவுக்கு உறுதுணையாய் விளங்கியது.தல யாத்திரையின்போது பயண நெடுகிலும் ஓதுவாமூர்த்திகள் கொடுமுடி தியாகராசனும் அ. செகந்நாதனும் திருமுறைப் பண்ணிசை நிகழ்த்திப் பக்திமணம் கமழ உதவிய பெருமைக்குரியவர்கள்.

கொங்கேழ் தலயாத்திரை நிறைவு பெற்றபோது அவினாசியில் திருக்கோவிலில் இரவு அன்னம் பாலித்து கரூர் சிவனடியார் திருக்கூட்டத்தினரைப் போற்றிய பெருமைக்குரிய அருட் செல்வர் திருப்பூர் சுடர்மணி பின்னலாடை நிறுவனத்தின் உரிமையாளர் அருள் திரு. என். நடராஜன் அவர்களின் திருப்பணி போற்றி மகிழ்ந்து வணங்கத்தக்கது.

சிவனடியார் திருக்கூட்டம்

முதன்மைப் புரவலர் : *தவத்திரு ஆத்மானந்தா சுவாமிகள்*
கௌரவத் தலைவர் : *புரவலர். தைலா சண்முகசுந்தரம்*
தலைவர் : *அருள் திரு. வி.பி.எஸ். பாலசுப்பிரமணியம்,*
எம்.ஏ.,
(திருப்பணிக்குழுத் தலைவர்)

துணைத்தலைவர்கள் :

அருள்திரு. ப. நடேச கவுண்டர்
அருள்திரு.ஆர். நடராஜன்
அருள்திரு. ஜி. கலியபெருமாள் நாயுடு
அருள்திரு.பி. செல்லமுத்து
(அறங்காவலர்குழுத் தலைவர்)
அருள்திரு.மேலை. பழனியப்பன்
அருள்திரு. ஆர். பசுபதிசெட்டியார்

அருள்திரு. ந. சின்னப்பன்
செயலர்

அருள்திரு. எம். கண்ணன்
இணைச்செயலர்

அருள்திரு. த. பழனிவேலு
பொருளாளர்

செயற்குழு

அருள் திரு. புலவர் நடேசனார்

அருள் திரு. பேராசிரியர் கருவை பழனிசாமி

அருள் திரு. இராம. சண்முகாநந்தா

அருள் திரு. த. சிவராமன்

அருள் திரு. என். இலட்சுமணன்

அருள் திரு. சி. மாணிக்கம்

அருள் திரு. கே. பாஸ்கர்

அருள்திரு. டாக்டர். என்.ஆர்.பாலு

உறுப்பினர்கள் மொத்தம் 273 பேர்

கரூர் திருக்குறள் பேரவை

தவத்திரு ஆத்மானந்தா சுவாமிகள்
அருள்திரு வி.பி.எஸ். பாலசுப்பிரமணியம்
" குட்வில் பி. ராஜூ
" ப. நடேச கவுண்டர்
" GNS. நடராஜன்.
" ஆறுமுக கவுடு
" தாயுமானவர் இல்லம், காசி விசுவநாதன்
" Dr. சி. ராமச்சந்திரன்
" Pee Tee Coach தங்கராஜூ
" கே. சி. பழனிசாமி
" தைலா சன்முகசுந்தரம்
" வைரவன்
" D.S.M. அனந்தகிருஷ்ணன்
" புலவர் ச. நடேசனார்
" பேராசிரியர் கருவை பழனிசாமி
" ஆர்.பி. கோவிந்தசாமி
" மேலை பழனியப்பன்
" பி. செல்லமுத்து
" PL.A. பார்மா சூட்டிக்கல்ஸ்

ஆகியோர் வழங்கிய நிதியுதவியை நிரந்தர வைப்புத் தொகையாக கொண்டு கரூர் திருக்குறள் பேரவை மாதந்தோறும் மூன்றாம் ஞாயிறு பின் மாலை 7 மணி முதல் 8 மணி வரை திருக்குறள் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1992 ஜூன் திங்களில் தொடங்கி வைக்கப்பட்ட இப்பேரவையில் பின்வரும் அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டு திருக்குறள் அதிகாரங்களுக்கு பொருள் விளக்கம் தந்து நயம் காட்டியுள்ளனர்.

இளசை சுந்தரம்
எஸ். கே. இராமராசன்
கோவை இளங்கோவன்
பேராசிரியர் வேணுகோபால்
கோடப்பிள்ளை
பேரா. சக்திவேல்
புலவர் ஆ. பழனி
ஆர்.பி. கோவிந்தசாமி
கோ. செல்வம்
டாக்டர் இராணி வேலுசாமி

தென்னிலை கோவிந்தன்
சகுந்தலா சீனிவாசன்
கருவை பழனிசாமி
கடவூர் மணிமாறன்
அருணா பொன்னுசாமி
டாக்டர் கன்னல்
கமாலுதீன்
இராம. இளங்குமரன்
ஆத்மானந்தா சுவாமிகள்
பகவான் சுரேஷ்வரர்
பழ. முத்தப்பன்
மேலை பழனியப்பன்
சரஸ்வதி கதிர்வேலு

ஆர். பி. கோவிந்தசாமி,
தலைவர்

மேலை பழனியப்பன்,
செயலர்

ஜி.என்.எஸ். நடராஜன்,
பொருளாளர்

பேரா. கருவை பழனிசாமி,
துணைத் தலைவர்

அருணா பொன்னுசாமி,
இணைச் செயலர்.

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்து இனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது.

இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது
உணர விரித்துரையாதார்.

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழி நல்குரவே தலை.

சலத்தால் பொருள் செய்து ஏமாக்கல் பசுமண்
கலத்துள் நீர் பெய்துரீ இயற்று.

சன்மார்க்க சங்கம், கரூர்

நன்மார்க்கமாம் சன்மார்க்கம் வளர்க்கும் சபைக்குள் தொன்மைச் சிறப்பும் தொய்விலாப் பணியும் மிக்கது கரூர் சன்மார்க்க சங்கமாகும்.

நாற்பத்திமூன்று ஆண்டுகட்கு முன்னே 1951 ஆம் ஆண்டு மே மாதம் தமிழறிஞர் சென்னிமலை ஞானசம்மந்தம் அவர்களால் தடுத்தாண்டதும் தொடுத்தாண்டதும் என்ற நிறைவான செந்தமிழ் சிவ உரையுடன்இறைநெறி பரப்ப இனிய உதயமாய்த் தோன்றியது கரூர் சன்மார்க்க சங்கம்.

உயர்திரு சுப்ரமணிய கௌடு, காமாட்சி முதலியார், கோவிந்தராசு பிள்ளை, டி.வி. ராமசாமி பிள்ளை போன்ற சான்றோர் பெருமக்களால் நிர்வகிக்கப்பட்டதும், ஒவ்வொரு ஞாயிறு மாலையும் சொற்பொழிவு நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வருவதும் கரூர் சன்மார்க்க சங்கச் சிறப்பாகும்.

தமிழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளர்கள், ஞானிகள், சாதுக்கள், மடாதிபதிகள் குறிப்பாக கிரிதாரி பிரசாத், வாரியார், கி.வா.ஜ., சத்தியசீலன், குன்றக்குடி அடிகளார், தருமை ஆதினம், மதுரை ஆதீனம், சாய்மாதா பிருந்தா தேவி சீகம்பட்டி சு. இராமலிங்கம் இப்படிப் பலரும் வந்து ஆய்வுரை அருந்தமிழ்ப் பாட்டரங்கம், பட்டி மன்றம், சுழலும் சொற்போர், வழக்காடு மன்றம் என கற்றோருக்குத் தெளிவும் தமிழ் வணர்ந்தோருக்கு நெறி படுத்தும் மையமாயும் சீர்மிகு தொண்டினைச் சிறப்பாகச் செய்து வருகிறது கரூர் சன்மார்க்க சங்கம்.

ஆன்மீகக் கருத்துக்களை மக்களிடம் பரப்புவதையும், சைவவைணவ பேதமின்றி பொழிவுகளைப் போற்றுவதையும் கடைபிடித்தும் இச்சங்க உரை கேட்க செந்தமிழ்த் தேன்சுவை மடுக்க வயதானவர்கள் தொட்டு வளரும் இளம் தளிருகள் வரை இருநூறுக்கு மேற்பட்டோர் கலந்து கொள்வதும் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பொழிஞர்களை உருவாக்கிவருவதும் முத்தாய்ப்பான சங்கத்தின் சத்தான பணியாகும். சங்கத்தின் புகழ்பவனி பெருகவும் செந்தமிழ் வளர் சிறப்புரைகளைச் செவிமடுக்கவும் உள்ளம் தெளிந்து கள்ளம் நீங்கி கனிவு கூடவும் சங்கத்தின் பணி தொடரக் கூடிட அழைக்கிறோம். வாரீர் ! வாரீர் !!

பொதுசமய சன்மார்க்கச் சங்கம், கரூர்.
தலைவர் : ஆறுமுக கௌடு
துணைத் தலைவர்கள் :
வி.பி.எஸ். பாலசுப்ரமணியம், சுப. லட்சுமணன்
செயலர்: ச. நடேசனார்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே

-அப்பர்

1995இல் பிரதோஷ வழிபாடு

ஜனவரி	14	சனி
	28	சனி
பிப்ரவரி	12	ஞாயிறு
	27	திங்கள்
மார்ச்சு	14	செவ்வாய்
	28	செவ்வாய்
ஏப்ரல்	13	வியாழன்
	27	வியாழன்
மே	12	வெள்ளி
	26	வெள்ளி
ஜூன்	10	சனி
	25	ஞாயிறு
ஜூலை	10	திங்கள்
	25	செவ்வாய்
ஆகஸ்ட்	8	செவ்வாய்
	23	புதன்
செப்டம்பர்	6	புதன்
	22	வெள்ளி
அக்டோபர்	6	வெள்ளி
	21	சனி
நவம்பர்	4	சனி
	20	திங்கள்
டிசம்பர்	4	திங்கள்
	19	செவ்வாய்

பிரதோஷப் பெருமை

பிரதோஷ வழிபாடு செய்தால் வறுமை, பயம், பாவம், மரண வேதனை இவையெல்லாம் ஒழிந்துவிடும். நலம் பல விளையும். சனிக்கிழமை வரும் பிரதோஷ வழிபாடு மிகச்சிறந்ததாகும். பிரதோஷ வழிபாடு செய்ய மாலயனாதி வானவர்களும் சிவாலயம் செல்வார்கள்; ஆதலால் பிரதோஷ நேரத்தில் திருமால் கோயில்களில் வழிபாடு செய்வதில்லை. ஒவ்வொரு நாளும் மாலை 4.30 முதல் 6 மணிவரை பிரதோஷ நேரமாகும் தினப் பிரதோஷம் எனப்படும்.

காலத்தில் செய்வதற்கு அதிகப் பலன் உண்டு பாலோடாயினும் காலமறிந்துண் என்பது ஒரு பழமொழி.
இறைவனை எப்போதும் வழிபட வேண்டும்;ஆனால் புண்ணிய தினங்களில் வழிபட்டால் ஒன்றுக்கு கோடி மடங்கு மிகுதியான பயன்விளையும்.
சோமவாரம், சிவராத்திரி, தைப்பூசம், பங்குனிஉத்திரம், கந்தர்சஷ்டி, வைகுண்ட ஏகாதசி, சூரிய சந்திர கிரகண காலங்கள், திருவாதிரை பிரதோசம் முதலிய புண்ணிய நாட்களில் அன்புடன் வழிபாடு புரிபவர்கள் பாவங்களினின்றும் நீங்கி, புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு என்ற மும்மை நலன்களையும் எளிதில் பெறுவார்கள்
விரத நாட்களில் உண்ணாது நோம்பிருந்து ஆலய வழிபாடு செய்து திருமுறைகளை ஓதி ஐந்தெழுத்தை ஜெபித்தல் வேண்டும்.

1. பஞ்சாட்சர ஜெபம் - மன நலமும்
2. திருமுறைகளை ஓதுவது - வாக்கு நலமும்
3. ஆலய வழிபாடு - உடல் நலமும் - தந்து நம்மைக் காக்கும்;

வினைகள் விலகும்; அருள் ஆற்றல் உண்டாகும். மார்க்கண்டேயர் சிவ வழிபாடு செய்து மறலியை வென்று வீடு பேறு பெற்றார்.


பிரதோஷத்தன்று வழிபட்டால் ஓராண்டுகாலம் சிவாலயம் சென்று வழிபடும் பலனையும் சனி பிரதோஷத்தன்று வழிபட்டால் பல ஆண்டு காலம் சிவாலயம் சென்று வழிபடும் பலனையும் அடைவார்கள். சிவாய நம என்று சொல்வார்க்கு அபாயமில்லை. சிவனைத் துதிப்பதற்கு உகந்த நாளில் முக்கியமானது பிரதோஷ நாளாகும். தேவர்களின் துயரை நீக்க நஞ்சை உண்ணாமலும் உமிழாமலும் தன் கண்டத்தில் இருத்தி அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காத்து அனைவரின் துயரைப்போக்க சக்தி முழுவதையும் தன் வசப்படுத்தி, நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கு இடையே பிரதோஷ காலத்தில்தான் திருநடனம் செய்தருளினார். ஆகையால் பிரதோஷ காலத்தில் சிவாலயம் சென்று சிவனை வணங்கி கூட்டுவழிபாடு செய்து அருள்பெறவேண்டும். பிரதோஷ நேரத்தில் வழிபாடு செய்வது சகல சௌபாக்கியங்களையும் அளிக்கவல்லது.

சிவாலயங்களில் செய்யத் தகாதன

(வழங்கி அருளியவர்:ம. இளங்கோவன், கரூர் வைசியா வங்கி)

1. தூய்மையின்றி செல்லக்கூடாது.
2. மிதியடியுடன் செல்லக்கூடாது.
3. சமயச் சின்னங்கள் இன்றிச் செல்லக்கூடாது.
4. வீண்பேச்சு கூடாது.
5. சண்டையிடக்கூடாது.
6. எச்சில் துப்பக்கூடாது.
7. இறைவனுக்குச் சாத்தப்பட்ட மலர் வில்வம் திருநீறு ஆகியவற்றை மிதிக்கக்கூடாது.
8. கோயில் விக்ரகங்களைத் தொடக்கூடாது.
9. பலிபீடம், நந்தி இவற்றின் குறுக்கே செல்லக் கூடாது.
10. சண்டேஸ்வர சந்நிதியில் நூல் போடக்கூடாது.
11. கொடிமரம் தவிர வேறு எந்த சந்நிதியிலும் விழுந்து வணங்கக்கூடாது.
12. சந்நிதியை மறைத்துக்கொண்டு இறைவனைத் தரிசனம் செய்யக்கூடாது.





1995 ஜனவரியில் (1- 5) தஞ்சையில் நிகழும் 8ஆவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகைதரும் அறிஞர் பெருமக்களுக்கும், மெய்யன்பர்களுக்கும் கரூர் சிவனடியார் திருக்கூட்டத்தின் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

- திருக்குறள்

நெரூரில் ஜீவ சமாதி பெற்றுள்ள ஸ்ரீ சத்குரு சதாசிவ பிரம்மேந்திராள் காசி விசுவநாதர் விசாலாட்சி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுவிழாக் காண அன்பர்களைக் கரம் கூப்பி அழைக்கிறோம்

திருக்குட நன்னீராட்டு விழா:
22.1.1995 ஞாயிறு காலை 10- 11 மணி



நெரூரில் ஜீவசமாதி கண்டுள்ள ஸ்ரீசத்குரு சதாசிவ
பிரம்மேந்திராள் திருக்கோயில் கும்பாபிஷேகம்
22-1-95 ஞாயிறு காலை 10 - 11

ரேவதி பிரிண்டர்ஸ், கரூர் -1. © 20631.